உ

ஸ்ரீமத்

விராட் விஸ்வப்பிரம்மணே நமः

# சென்சஸாபாஸ தர்ப்பண முக்கிய கவனிப்பு.

இது

சென்னை சூளையில் வசிக்கும்

ஸ்ரீமத் அ. மு. ஸ்வா[illegible]தாச்சாரி என்னும்

மாணிக்கயோகியரா லியற்றப்பட்டு,

பிரம்மஸ்ரீ.

கோ. கன்னியப்பாச்சாரிய ரவர்களாற்

றமது

சென்னை சிந்தாதிரிப்பேட்டை,

விஸ்வகர்மோத்தாரண அச்சியந்திரசாலையிற்

[illegible]பதிப்பிக்கப்பட்டது.

விலை அணா-1

OFFICE OF THE REGISTRAR ... MADRAS

Q2 : 414
M13
180042

ஓம்.

ஸ்ரீமத் விஸ்வப்பிரம்ஹணே நமஃ

# சென்சஸாபாஸ தர்ப்பண

## முக்கிய கவனிப்பு.

நான்முகன்படைத்த நானாவித வுலகங்களிற் சிறந்ததூஉம் பூமகட்குத் திலகம்போல விளங்கிக் கொண்டுள்ளதூஉமாய புண்ணியபூமி யெனப்படுகிற இப் பரதகண்டத்தின்கண் கிடைத்தற்கரிய மானுட யாக்கையாகப்பிறப்பதரிது. பிறந்தாலும், சதாசார சம்பன்னனாகிய தந்தை தாயாரது கருவிற் றோற்றுவதரிது. தோற்றினும், புருடனாகப் பிறப்பதரிது. பிறந்தாலும், நான்கு வருணங்களில் பிராம்ஹணனாகச் செனிப்பதரிது. அதினும் விவேகியாகப் பிறப்பது மிகவுமரிது. இதனை

"వివేకమతి దుర్లభం."

"விவேகமதி துர்லபம்." என்னும்

வாக்கியத்தா லுணர்க. விவேக மென்பதற்கு ஆராய்வு, பகுத்தறிவு, புத்தி, மனக்கூர்மை யென்னு மிவை ஒருபொருட்சொற்கள். இதனால் வேதமுதலிய நூல்களின் ஆராய்ச்சியால் நித்தியாநித்யமெனப்படுகிற பகுத்தறிவும், அதனால் சத்புத்தியும், அதனால் மனக்கூர்மையும் அமையும்.

அமையவே விவேகியெனப் பெயர் பெறுவன், [illegible] அத்தகைய விவேகமென்னுஞ் ஞான திருஷ்டியினால் கடவுளின் றிருவருளைப் பெறலாமேயன்றி அவிவேக மெனப்படுகிற ஊன திருஷ்டியினால் அவ்வருள் ப்ராப்தமாகாதென்பது நிச்சயம். இதனை

"బ్రహ్మజ్ఞానేన బ్రాహ్మణః."

"ப்ரம்ஹக்ஞானேன ப்ராம்ஹணஃ" என வியாசமுனிவர் வாக்கியத்தாலும்,

"பொ[illegible]றுமுடம்பள வாகியிருப்பாரும் பூசுராவார்களோ" என்றுமுளவறி வானவரன்றே விருபிறப்பாளராவார்" எனத்

தத்துவராய சுவாமிகள் வாக்கியத்தாலுமுணர்க. ப்ரம்ஹக்ஞானம் ஞானகாண்டத்தாற் பெறப்படுமேயன்றி கர்மகாண்டத்தா லதனைப் பெறுதற்கரிதாகும். அங்ஙனமாயினும் இல்லற தர்மத்தின் வழுவாதுநின்று பழிபாவத்திற்கஞ்சி நித்ய நைமித்திகாதி தர்மங்களை நடாத்தியபின்னர் பூர்வ புண்ணியத்தினால் அதிற்பற்றுநீங்கும். நீங்கியஞான்று பக்திகாண்டத்திற் கதிகாரியாவன். ஆகவே பாஹ்ய பக்திக்குரித்தாய ஸ்ரவண முதலியனவாய நவகுணங்க ளியல்பாக வமையும். அமையவே அநந்யபக்தி முதலியவை கூடும். அவையெய்தவே பொன்னாலியற்றிய புஷ்பத்திற்குப் பரிமளமும் பொருந்துமாயின் எவ்வாறு அத்யந்த விசேஷமாகுமோ அதுபோல, ப்ராம்

ஹனாகப் பிறந்ததற்குச் சமமுதலியனவாய நவகுணங்கள் இயல்பாகவே அமைந்துளவாயின் அத்தகைய நிலைமை மிக விசேஷமென்பது நிச்சயம். இதனை

"శమోదమస్తపశ్శౌచం క్షాంతిరార్జవమేవచ
జ్ఞానం విజ్ఞానమాస్తిక్యం బ్రాహ్మం కర్మ స్వభావజం."

"ஸமோதம தபஸ்ஸௌசம் க்ஷாந்திரார் ஜவமேவச, க்ஞானம் விக்ஞான மாஸ்திக்யம் ப்ராம்ஹங் கர்ம ஸ்வபாவஜம்" என

ஸ்ரீகண்ணபிரான் றிருவாக்கா லுணர்க. ஐயா, பொதுக்கடவுளுக்குப் பயந்து யாவரு மங்கீகரிக்குமாறு சத்தியமாகக் கூறுவதனைக் கவனித்துக் கேளுங்கள். ஸ்ரீபகவத்கீதை இந்துக்களன்றி எச்சமயத்தாரு நிச்சயமாக அங்கீகரிப்ப ராதலால் அதன் மூலமாகவே ஜாதி நிலைமையினைக் கோதின்றிக்காட்டுதும்; உயிர்களைக்காப்பாற்றுதல் விஷ்ணுவுக்கே உரிய தொழிலாகும். ஸ்ருஷ்டித்தன்றே பரிபாலனம்புரியவேண்டும். அச்சிருஷ்டியும் அவரவர்களுடைய பூர்வகர்மத்திற்குத் தக்கவாறமையும். இதனை

"చాతుర్వర్ణ్యం మయాసృష్టం గుణకర్మ విభాగశః."

"சாதுர்வர்ணயம் மயாஸ்ருவ்ஷ்டம் குணகர்ம விபாகஸ:" என

௪-வது ஞானயோகம் ௧௩-வது ஸ்லோகத்தா லுணர்க. இதனால் ஆகாசாதி பஞ்ச மஹாபூதங்க

ளையும் அகிலடங்கியுள்ளனவாய பலகோடி அண்டங்களையும் அவற்றில் வசித்துக்கொண் டிராநின்ற சராசராதி யனந்த ஜீவர்களையும் அவர்கள் புறத்தில் வியவகரிப்பதற்குரிய சூரியாதி ஒளிகளையுமியற்றுதல்யாதோ அது சாமான்ய ஸ்ருட்டி எனவும், அவ்விஷ்ணுவுக்கே சநாதனரெனப் பெயரமைதலால் அச்சநாதன ரெனப்படுகிற மயப்ரம்ஹ சந்ததியார்கள் மூலமாக விருந்து உயிர்களைக் காப்பாற்றுதல் யாதோ அது விசேஷண ஸ்ருட்டியெனவும்; இஃதே அயங், தாரு, செம்பு, சிலை, ஸ்வர்ன மென்னும் பஞ்ச கிருத்தியங்களெனவும் உள்ளங்கை நெல்லிக்கனிபோலச் சங்கையின்றி நிச்சயிக்கப்பட்டது. இதனை

“మయస్సనాత నాఖ్యాతః ప్రాయస్సర్వం సనాతనః

எனவும் “సనాతన స్స్వయం విష్ణుః.”

“மயஸ்ஸநாத நாக்கியாதஃ ப்ராயஸ்ஸர்வம் ஸநாதநஃ
எனவும் ஸநாதனஸ்வயம் விஷ்ணு” எனவும்

ஸ்ரீமத் வியாச மஹாமுனிவர் ப்ரம்ஹாண்ட புராணந்தர்க் கெதமாயுள்ள மன்வாதி பஞ்சப்ரம்ஹ சந்ததிக்குரிய கோத்திர காண்டத்திற்கூறியுள்ளார். அன்றியும்

“విశ్వకర్మా మనుస్త్వష్టా.”

“விஸ்வகர்மா மனுத்வஷ்டா.” என

விஷ்ணு சஹஷ்ரநாம ஸ்தோத்திரத்திலும் இன்னும் பலநூல்களிலும் இவ்வாறே கூறியுளர்.

இன்னனவாய விஷயங்களை எமது சகோதராராக விளங்காநின்ற ஆரியபண்டிதர்கள் தங்கள் மனசாக்ஷியாக நன்றாக உணர்ந்தவர்களே என்பது திண்ணம். அங்ஙனமாயினும், தன் புருஷனது நாமதேயந் தன்மனதுக்குத் தெரிந்துளதாயினும் தன் பாங்கியானவள் கேட்டவுடன் வாக்கினாற் கூறுவதற்கு அச்சமெய்தி யெவ்வாறு குறிப்பாற் கூறுகின்றனளோ? அதுபோல, சர்வாதாரபூதனும் பரம புருஷனும் விளங்காநின்ற ஸ்ரீமத் பொதுக் கடவுளென்னும் விஸ்வகர்ம பரமாத்மாவினது மஹிமையினைப் பண்டிதர்கள் மனஸ்பூர்த்தியாக உணர்ந்திருந்தும் வாக்கினாற் புகல்வதற்கு அச்சமெய்தி "கம்" என்னும் தாதுவிற்குரியநிலையினைக் குறிப்பா லுணர்ந்து மௌனமுற்றனர் போலும். இவ்விசாரத்தினால் கம்மாளர்களுடைய பூர்வ கர்மத்திற்கீடாக ஸ்ரீபகவானால் ச-வது ஞானயோகத்தில் நியமிக்கப்பட் டிராநின்ற ஸ்ருதிகிருத்யமும் கஅ-வது அத்தியாயத்திற் கூறப்பட்டுள்ள கூ-குணங்களில் ஆதியான சமபாவமும் அக்கம்மாளர்களுக் கிருக்கின்றனவேயன்றி ப்ராம்ஹணர்களுக்கில்லையெனவும், அவ்வொற்றுமைக் குணமிருப்பதனால் தமது கைத்தொழிலைப் பலருக்குங் கற்பித்துக்கொடுத்து அவர்கள் ஜீவிக்கும் வழியினைத் தெரிவித் திருக்கின்றார்களெனவுந் தெளிவாகப் புலப்படுகிறது. இத்தெளிவைச் சகல மானவர்களும் பெறுமாறுகருதி சத்யக்ஞானனந் தப்பொருளாக விளங்காநின்ற பொதுக்கடவுளை

னப்படுகிற விஸ்வகர்மபகவானே சமஸ்தமானவர்களுடைய தேஹாலய மென்னும் உள்ளக்கமலத்தின்கண் ஒருபடித்தாகவும் எப்பொழுதும் ஞானசூரியனாகவும் பிரகாசித்துக்கொண் டுள்ளார். அவருக்கே தேவனென்றும் விஸ்வகர்மாவென்றும் அதீத பரமாத்மாவென்றும் நிச்சயமாகப் பொருள்படும். இதனை

"ఏష దేవో విశ్వకర్మా మహాత్మా సదాజనానాగ్
హృదయె సన్నివిష్టః."

"ஏஷதேவோ விஸ்வகர்மாமஹாத்ம சதாஜனானாம் ஹ்ருதயே சந்நிவிஷ்டஃ" என

ஸ்வேதா ஸ்வதரோபநிஷத் வாக்கியத்தானும்

"సర్వస్యచాహం హృది సన్నివిష్టః."

"சர்வஸ்யசாஹம் ஹ்ருதி சந்நிவிஷ்டஃ" எனப் பகவத்கீதாவசனத்தாலும்,

"மலர்மிசையேகினான்" எனப்

பொது வேதமெனப்படுகிற திருக்குறள் வாக்கியத்தானும் உய்த்துணர்க. இவ்வாறுணருந் திறமையில்லாதவனாயினும் யாதொருவன் என்பொருட்டு துளசிமுதலிய புஷ்பத்தையாவது ஜலத்தையாவது பக்தியோடு எனக்குக் கொடுக்கின்றானோ அப்போதே அதை நான் க்ரஹித்து அவன் விரும்பிய பலத்தைக் கொடுக்கின்றேன் எனப் பகவான் திருவாக்கே சாக்ஷியாயிருக்கிறது. இதனை

"పత్రం పుష్పం ఫలంతోయం యోమెభక్త్యా ప్రయ
చ్ఛతి-తదహం భక్త్యుపహృత మశ్నామి ప్రయతాత్మనః."

"பத்ரம் புஷ்பம் பலந்தோயம் யோமேபக்தியா ப்ரயச்சதி-தத்ஹம் பக்தியு பஹ்ருதமஸ் நாமிப்ரயதாத் மநः" என

பகவத்கீதை ௯-வது அத்தியாயம் ௨௬-வது ஸ்லோகத்தாலுணர்க. இவ்வுணர்வே பகல்; அஃதின்மையே யிரவு. இருட்டிற்பயமேயன்றி விவேகமென்னும் வெளிச்சத்திற் பயமின்றாதலாலும் இவ்விரண்டினையும் பகுத்தறிவது யாதோ அதுவே அதிசயப் பார்வை என்பது நிச்சயமாதலாலும், இதனாற் சிறப்பென்னுஞ் செம்பொருள் தோன்றுமேயன்றி வர்ணாஸ்ரமத்தைச் சத்தியமாகப்பார்த் ததிசயிப்பதிற் கிஞ்சிற்றும் பயனின்றென்பதுதிண்ணம். இதனை

"பிறப்பென்னும் பேதமைநீங்கச் சிறப்பென்னுஞ் செம்பொருள் காண்பதறிவு" எனத்

திருக்குறள் மெய்யுணர்தலென்னும் அதிகாரத்தாலுணர்க. இதனையும் புறங்கூறாமை, பயனில சொல்லாமை, இனியவைகூறலென்னும் அதிகாரங்களின் கருத்தையும் சென்ஸஸ்வரைந்த எமது சகோதரர் பார்த்திலர்போலும். இதுநிற்க. உலக வழக்கத்தில் வழங்கிக்கொண்டுள்ள ஸ்லோகங்களையும் அவற்றிற்கு முன்பின் சம்பந்தமாயுள்ள வாக்கியங்களையும் தெளிவாகவிவரிக்குதும். விஷ்ணு அம்ஸ சம்பூதராகவிளங்காநின்ற ஸ்ரீவியாச

முனிவர் அவதாரம் ௩-வ துயுகம். இவ்விதயுகங்கள் கூடிய அனேக கற்பங்களைப் பார்த்துக்கொண்டுள்ளவராகவும் சாங்கியாயனாதி தேவரிஷிகள் ௯உ௫ - பேர்களில் ஒருவராகவும் விளங்காநின்ற சனற்குமாரமுனிவர் வியாசருக்கு ஆசாரியரென்பது நிச்சயம். இதனை

"அண்ணல்பாற் றெளிந்தநந்தி யடியர்பாற் சனற்குமார னுண்ணிறை யன்பினுய்ந்து வியாஸனுக் குணர்த்த" எனத்

திருவிளையாடற் புராணக் கவியா லுணர்க. இவ்வுணர்விற் சிறப்பமைந்த வியாசமஹாமுனிவர் வேதார்த்தத்தினைப் பல புராணங்களில் வெளியிடக்கருதிய காலையில் உலக ஸ்ருஷ்டிக்குக் காரணகர்த்தர்களாக விளங்காநின்ற ஸ்ரீமத் சானகரல்லது கஸ்யபாதி ௯உ௫-தேவரிஷிகளுடைய வம்ஸ நிலைமையினையும் தமது இரண்டாம் பாட்டனாராக விளங்காநின்ற வசிஷ்டமுனிவர் சந்ததி உ-வதுயுகத்திற்பிரிந்தவிபரத்தினையும் திரிகால க்ஞானதிருஷ்டியினா லுணர்ந்ததுமன்றி இக்கலிகாலத்தில் மரீசியாதி தேவரிஷி சந்ததியார்களைத் தமதுவம்ஸத்தவர்கள் தெரிந்துகொண்டு இருவகுப்பினர்களும் ஒற்றுமையாக இருப்பார்களெனத் தீர்மானித்துக் கடவுளுக்குப் பொதுவாகக் கூறியுள்ளாரென்பது நிச்சயம். இதனை

"బ్రాహ్మణానాం కులం పూర్వం ద్వేధావిరచితం సురైః,
ఆర్షేయం పౌరుషేయంచ జన్మకర్మ విశేషతః, ఆర్షేయంవసిష్టాది

హ్యాముష్మిన్ మునిసత్తమా, జన్మనాజాయతే శూద్రః కర్మణాజాయతే ద్విజః, వేదపాఠేన విప్రస్స్యాత్ బ్రహ్మజ్ఞానేన బ్రాహ్మణః, యద్విశ్వకర్మణశ్చాస్య పురుషస్యముఖోద్భవం, పౌరుషేయమితి ఖ్యాతం పంచగోత్రం మహాద్కులమ్.''

"ப்ராம்ஹணுங் குலம்பூர்வம் த்வேதாவிரசிதம் சுரைஃ, ஆர்ஷேயம் பௌருஷேயஞ்ச ஜன்மகர்மவிசேதஃ, ஆர்ஷேயம் வசிஷ்டாதி ஹ்யமுஷ்மின் முனிசத்தமா, ஜன்மநாஜாயதே சூத்ரஃ கர்மணு ஜாயதேத்விஜஃ, வேதபாடேன விப்ரஸ்யாத் ப்ரம்ஹக்ஞானேன ப்ராம்ஹணஃ, யத்விஸ்வகர்மணஸ்சாஸ்ய புருஷஸ்ய முகோத்பவம், பௌருஷேய மிதிக்கியாதம் பஞ்சகோத்ரம் மஹாத்குலம்."

இதனை ப்ரம்ஹாண்டபுராண சுவிருதகாளஹத்தி முனி சம்வாதத்தில் கூறப்பட்டுள்ள வாக்கியங்களாலுணர்க. (வினு) அற்றுயின் பூர்வமென்னும்பதம் யாதுநிமித்தங் கூறியுளரென்பார்க்கு. (விடை)

"జన్మనా బ్రాహ్మణోజ్ఞేయః కర్మణి బ్రహ్మచారిణః, వేదపాఠేన స్వాధ్యాయః జ్ఞానేన బ్రంహ్మవేత్తకః".

"ஜன்மநாப்ராம்ஹணுக்ஞேயஃ கர்ம்ணுப்ரம்ஹசாரிணஃ, வேதபாடேன ஸ்வாத்தியாயஃ க்ஞானேனப்ரம்ஹவேத்தகஃ" என

அநாதியான சிற்பத்தினும் விஸ்வக்ஞரெனப் பெயரமைந்த தைவக்ஞ ப்ரஜாபதியினு லியற்றப்பட்டுள்ள தைவக்ஞ ஸ்மிருதியினும் அடங்கிய ஸ்லோகத்தை ஆதாரமாக வைத்து வியாஸமகாமுனிவர்

பூர்வ மென்னும் பதம் பிரயோகித்தன ரென்பது நிச்சயம். இங்ஙனஞ் சத்தியக்ஞானியாக விளங்கா நின்ற வியாசமுனிவரது திருவாக்காயுள்ள ஸ்லோகங்களில் ஆதியந்தத்தி லடங்கியவை பண்டிதர்களுக்குப் பிரதிகூலமா யிருந்தமையா லவற்றைத் தள்ளிவிட்டார்களாயினும் பிராசீனமாதலால் மத்தியிலடங்கியுள்ள

"జన్మనాజాయతేశూద్రః."

"ஜன்மநாஜ்ஜாயதே சூத்ரஃ" என்னும்

ஸ்லோகம் உலகின்கண் வழக்கமாக வழங்குகிறதென்க. அன்றியும் கஸ்யபாதி தேவரிஷிகளை மிகுந்த பக்திவிநயத்தோடு பிரார்த்தித்ததாக வின் அதுநிமித்தம் கலியுகம் ௫௮-வருஷபரியந்தம் உமதுசந்ததியார்களுக்குப் பூஜிதை யிருக்குமெனச் சநத்குமாரமுனிவராசிர்வதித்து ஸ்லோகம் இயற்றியுள்ளார். இதனை

"వ్యాసస్త్వాత్వ్యం మయాదత్తం విప్రస్సర్వత్ర పూజితః,
కలౌపంచ సహస్రాణి జాయతే వర్ణసంకరః."

"வியாசஸ்தௌத்யம் மயாதத்தம் விப்ரஸ்சர்வத்ர பூஜிதஃ, கலௌபஞ்ச சஹஸ்ராணி ஜாயதே வர்ணசங்கரஃ" என்பதனை யுணர்க.

இதில் பிற்பாதி உலகவழக்கத்தில் வழங்குகிறதேயன்றி முன்தொடர்பு இல்லாமையா லதினுண்மையினை வெளியிட்டனம்; அக்கஸ்யபாதி தேவருஷி சந்ததியார்க ளிடத்தில் வேதமிருந்த காலையில்

யாவருக்கும் பொதுவாக விருந்தது. அதன்பின்னர் வியாசமுனிவர் சந்ததியார்களால்

"ரிஷிகளெத்தனையோ மதங்களத்தனை"

என்னும் வாக்கியத்திற் கிணங்கப் பலவேற்றுமைப்பட்டன. அதுநிமித்தம்பொதுக்கடவுளநுக்ஞையினால் ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகளவதரித்து துர்மதங்களைக் கண்டித்தும் சைவமுதலியனவாய ஷண்மதங்களை ஸ்தாபித்ததுமன்றி விப்ரசந்ததிக்கு ஆசாரியராகவிருந்து லோகோபகாரமாக அத்வைதமதத்தைச் சித்தாந்தஞ்செய்தனர். அவருக்குப்பின்வந்த மத்துவர் ராமானுஜர் முதலியவர்கள் த்வைத விசிஷ்டாத்வைத சித்தாந்தங்களைநிர்த்தாரணை பண்ணியகாலையில் அவரவர்களுடைய ஜாதிசமயமே பெரிதெனவாதித்தார்களேயன்றி பொதுக்கடவுளுடைய அந்தரங்காபிப்ராயத்தினைப் பரியாலோசிக்கவில்லை. இங்ஙனம் விப்ரபண்டிதர்களபிவிர்த்தியாகித் துரியோதனாதிகள் பஞ்சபாண்டவர்களை யுபத்ரவஞ் செய்தது போலப் பஞ்சப்ராம்ஹ சந்ததியாரை வஞ்சனை செய்தார்களாதலாலும், பிராம்ஹணர்களன்றி இதரவருணத்தவர்கள் இந்துவேதத்தைப் பாராயணம்பண்ணக் கூடாதென நிபந்தனை விதித்துள்ள காரணத்தாலும், பொதுக்கடவுளநுக்ஞையினால் ப்ரம்ஹாம்ஸ சம்பூதராகத் திருவள்ளுவ நாயனார் அவதரித்து வேதார்த்தத்தைத் தென்மொழியி லமைத்துப் பொதுவேதமெனப் பெயர் விதித்தனர். அவ்வாறே ஸ்ரீசரஸ்வதிதேவியா ரம்ஸமாயவதரித்த அவ்

Q2.444
N13

வைப்பிராட்டியார் அநாதியாயுள்ள வேதாதிகளி லடங்கிய ரஹஸ்யார்த்தங்களைலோகோபகாரமாக நீதி நூல்களிலமைத்தனர். ஸ்ரீவிஷ்ணு அம்ஸாவ தாரமாக திருவுருக்கொண்ட இடைக்காடரென் பவர் கஉ௵ பரியந்தம் மழைபெய்யாது உயிர்க ளைத் துன்பமெய்துமாறு செய்துவருகின்ற நவ க்ருஹங்களுடைய உபத்திரவத்தைப்போக்கி அப் பஞ்சத்தை ௬0-௵த்திற் கலந்து அவ்வவ் வருட த்தில் நடக்கும் பலாபலன்களைச் சுருக்கி ௬0-வெ ண்பாக்களாகப் பாடியதற்கு இடைக்காடர் பஞ் சாங்கமெனப் பெயர் விதித்தனர். இவர்கள் அவ தாரகாலத்தில் மதுராபுரியின்கண் கடைச்சங்க மிருந்த தெனவும் அதற்குப்பூர்வமிருந்த அரிமர் த்தனபாண்டியனிடத்தில் ஸ்ரீமான் மாணிக்கவா சக ஸ்வாமிகள் மநுநீதிக்குச் சரியாக அரசுபுரிந் தாரெனவும் பழைய நூல்களினல் விவேகிகள் நன்றுயுணர்ந்துளரென்பது நிச்சயம். இவ்விவேக த்தை இந்து தேசத்தவர்களுக்குப் போதிக்கும் பொருட்டு இடையில் எழுந்தருளிய விப்ரபண்டி தர்கள் பஞ்சதந்திரக்கதையினை எக்காலத்தி லுண் டுபண்ணினர்களோ அக்காலமுதல் இவர்களுக்கு மந்திரித்வம் வந்ததெனவும் இவர்கள் காலத்தில் பூர்வமிருந்த மநுநீதி கனவிலு மில்லையெனவுங் கண்ணாடிபோலத் தெளிவாகப் புலப்படுகின்றது. இன்னனவாய நிலைமையினைப் பொதுக்கடவுள் ஆழ்ந்தகருத்தால் ஆலோசித்து(கஅ)சித்தர்களில் ஒருவராகவிளங்காநின்ற போகமுனிவரைநோக்கி

உமது புத்திரர்களால் இந்துதேசத்தினைச் சீர்படுமாறு செய்வாயாக என்றாக்ஞாபித்தனர். அவ்வநுக்ஞையின்வண்ணம் ஸ்கந்தாது அம்ஸமாகிய போகமுனிவர் புத்திரர்களையுண்டுபண்ணி அவர்களுக்கு இந்துதேச அரசாங்கத்தைக் கொடுத்து அம்மதஸ்தாபனைசெய்வதற்குத் தானே ஏசுநாதராக அவதாரஞ்செய்தனரென்பதுதிண்ணம் "ஏ" என்பதற்கு எல்லா மதஸ்தர்களும் ஏற்கத்தக்க கடவுள் ஒருவனேயென்பது பொருள். இதனை

"ఏకో దేవః".

"ஏகோதேவః" என்னும்

வேதவசனத்தாலுணர்க. (வினா) அவன் எத்தகையனோ? (விடை) "சு" நித்யசுத்த புத்தமுக்த சத்ய பரமாத்மஸ்வரூபமாகவும், உள்ளக் குளிர்ச்சியெனப்படுகிற உபசாந்த வடிவமாகவும் சதா பிரகாசித்துக்கொண்டுள்ளவனென்பது பொருள். இதனை

"శాంతం శివం చతుర్థం".

"ஸாந்தம் சிவம் சதுர்த்தம்" என்னும்

உபநிஷத் வாக்கியத்தாலுணர்க. (வினா) மீண்டும் எத்தகையன் என்பார்க்கு (விடை) "நாதஃ" சிரசென்னும் பரமண்டலத்தின்கண் த்வாத ஸாந்தமெனப்பெயர்பெற்ற சஹஸ்ரார மத்தியில் அந்தர் நாதமெனப்படுகிறப் பிரணவநாத மொலிக்கின்றது; அதில் துரியாதீதா கண்டஜ்யோதி சதாபிர

காசித்துக்கொண்டிருக்கின்றது; அதினப்ரகாசமே நேத்ரமத்தியி லிருப்பதனால் புறநோக்குடையார்க்கு உலகமாகவும் அகர முதலியனவாய அக்ஷரங்களாகவும் பலகலைகளாகவுந் தோற்றும்; அந்நேத்ர திருஷ்டியினைக் குருமுகமாயுணர்ந்து அஜாட்ப நித்திரை யென்னும் மேனோக்கமைந்தவர்களெவர்களோ அவர்களுக்குப் பொதுக்கடவுளுடைய அகண்ட சிதாகாசமாய யதார்த்தவடிவம் பிரத்யக்ஷமாகத் தோன்றுமென்பது நிச்சயம். இதனை

“అకారాదిస్వరాధ్యక్ష మాకాసమయ విగ్రహం”.

“அகாராதிஸ்வராத்தியக்ஷ மாகாஸமயவிக்ராஹம்”

என்னும் பஞ்சப்ரம்ஹோபநிஷத்திற்குச் சரியாக “அகரமுதல வெழுத்தெல்லாமாதி பகவன்முதற்றே யுலகு” என நாயனார் திருவாய்மலர்ந்தருளிய கடவுள் வாழ்த்துப் பாசுரத்தானும், “ஞானக்கண்ணுளர்க்கு ஞானானந்தச்சுடரா யூனக்கண்ணுளர்க் குலகமாய்” எனத் தத்துவராய ஸ்வாமிகள் வாக்கியத்தானுமுணர்க. அன்றியும் “க்ருஸ்து” என்பதற்கு தன்னைத் தியானிக்கும் பக்தர்களது பாபமென்னுமக்ஞானாந்தகாரத்தைப் போக்கி சுக்ஞானமென்னும் அறிவை யனுக்ரஹிப்பவரென்பதுபொருள்; எனவே எல்லாருள்ளக்கமலத்தினும் ஞானக்கண்ணாக விளங்கிக்கொண்டுள்ள ஸ்ரீக்ருஷ்ணபகவானெனப் பொருள்படும். இதனை

“హరేకృష్ణ హరేకృష్ణ హరేకృష్ణ హరే హరే”.

"ஹரேக்ருஷ்ண ஹரேக்ருஷ்ண ஹரேக்ருஷ்ண ஹரேஹரே" என

யாஜுஷி கலிசந்தாரணோபநிஷத் (எ௩)வது-வாக்கியத்தாலுணர்க. அன்றியும் தேவன்மாத்திரம் இருந்தார் அவருக்கு ஆதியுமில்லை, அந்தமுமில்லை எனப் பழைய ஏற்பாட்டுக்கதையில் கூறப்பட்டுள்ள வாக்கியத்திற்குச் சரியாக

"ఆద్యంతశూన్యం సకలం కలాపం శ్రీవిశ్వకర్మాణ మహంనమామి."

"ஆத்யந்தசூன்யம் ஸகலங்கலாபம் ஸ்ரீ விஸவகர்மாணமஹம் நமாமி" எனச்

சிவபெருமான் ஸ்கந்தருக்குத் திருவாய்மலர்ந்தருளிய நாகரகண்டவாக்யமே சாக்ஷியாயிருக்கின்றது. இங்ஙனம் இந்துமதத்திற்கும் ஏசுநாதர் விதித்துள்ள சித்தாந்தத்திற்கும் ஒற்றுமையாகவிருப்பதனால் இதனை விவேகிகளங்கீகரித்து மிகுந்த சந்தோஷமடைகின்றார்கள். இதுநிற்க; ஓர் புதுமையைக் கேளுங்கள்:—உபநயனச் சடங்கு நியமம்பூண்ட இருபிறப்பினர் மூவருள்ளும் முதல்வருணர்தாமே வேதாதிகளை ஓதற்பாலவாமன்றி ஏவற்றொழிற்கடன்பூண்ட மாதரும் சூத்திரரும் ஓதலாகாவெனக்கருதி

"స్త్రీ శూద్రానాధీయతాం".

"ஸ்ரீ ஸூத்ரௌ நாதீயேதாம்" என்றும்

அச்சமே கீழ்களதாசாரமாதலால் இவரை அச்சுறுத்தற்பொருட்டு

"త్రిపుజతుభ్యాం శ్రోత్రపూరణం జిహ్వాచ్ఛేదశ్చ".

"த்ரிபுஜதுப்யாம் ஸ்ரோத்ர புரணம் ஜிஹ்றவாஸ்சேதஸ்ச" என்றும்

வியாசமுனிவரியற்றிய ப்ரம்ஹ்ஸூத்ரபாஷயத்தில் அபசூத்திராதி கரணத்துள் கூறப்பட்டுள்ளனவென்றும் சென்னை தியோசாபிகல்சபை காரிப்தரிசி ஆ. தியாகராஜய்யர் அவர்களால் சித்திரபானுஹு பங்குனிமீ ஈஸாவாஸ்ப உபநிஷதார்த்தப்பிரகாச முகவுரையில் வெளியிட்டுள்ளார். இவர் கருத்தினைப்பரியாலோசிக்குமிடத்து நாவையுங் காதையுங்கண்டித்தல் ராஜநீதியா? விப்பிரர்கள் நீதியா? இவர்களை செய்வரெனக் கூறும்பக்ஷத்தில் ராஜன் விப்பிரர்களைத் தண்டிப்பனன்றோ? அரசனிடத்தில் இவர்கூறியிவர்கள் உத்திரவுப்பிரகாரம் அரசனியற்றுகின்றானெனக்கூறும்பக்ஷத்தில் நெல்லுக்காய்க்கிறமரந் தெரியாத கர்நாடகஅரசர்கள் காலத்தில் விப்ரர்களியற்றிய மித்ரபேதாதி பஞ்சதந்திர கதையின் பிரபாவமேயன்றி மனுப்ராஜாபதி விதித்துள்ள ராஜநீதியல்லவென்று கற்றுவல்ல நல்லோருணர்வரென்பது சத்தியம். சிரசுபோதுக்கடவு ளிருப்பிடமாதலால் காதைகண்டித்தால் கடவுளுக்கு அபராதியாவதுமன்றி சப்தங்கேட்கவியலா? காதைக்கண்டித்தாற் பிராணனொருக்காலிருப்பினும் நாவைக்கண்டித்தா லுயிர்போகு

மன்றோ? அவ்வுயிர் சிவலோக ப்ராப்த்தியா! பவ லோக ப்ராப்த்தியா! இதனை விவேகிகளே நன்றாயூகித்துணருங்கள். இந்நிலைமையினை ஸ்ரீமான் வியாஸமஹாமுனிவரியற்றியுளரெனச் சஹோதார் திருவாய்மலர்ந்தருளியுளர். அதினுண்மையினையும் சுருக்கிவிவரிக்குதும்:—பாராசரர் பகற்காலத்திலோர் தீவாந்தரத்தி லிருவர்கருத்திற் கிணங்குமாறு ஓர் சித்தியினால் இருளைக்கற்பித்த காலையில் அத்தீவின்கண் வியாஸமஹாமுனிவருதித்தமையின் இவர் க்ருஷ்ணத்வைபாயன ரெனப்பெயர் வஹித்தனர். இவரது ஆச்சார்ய ரென்னும் ஸ்ரீமத் சனத்குமாரமுனிவர் இயற்கையறிவு செயற்கையறிவு இரண்டுமேஅமைந்துள்ளவராகவும் பெரும்பாலும் அபேதசித்த முள்ளவராகவும் விளங்கிக்கொண் டிருக்கின்றன ராதலால் இவரது அநுக்ரஹம்பெற்ற வியாஸமுனிவரும் செய்கையறிவிற் சிறப்பமையப்பெற்ற சத்குண மமைந்தவரென்பது திண்ணம். இத்தகைய சுகுணசீலர் "அபசூத்ராதி காணத்தில் விருத்தமான சூத்திரமியற்றியுள்ளாரென்பது அசங்கதம்" எனெனின், பொதுக்கடவுளும் அவருடைய அம்ஸமாகிய மன்வாதி பஞ்சப்ரம்ஹங்களும் மனுப்ரஜாபதியும், சாங்கியாயனர் மரீசி முதலியனவாய (கஉ௫)தேவரிஷிகளுமாகிய இவர்களுக்கெல்லாம் வியாசர் பொதுவா யிருக்கவேண்டுமேயன்றி தன்வம்ஸத்தின்மீது அபிமானம் வைப்பரோ; வைத்தாரெனின் அவரை விஷ்ணுவம்ஸ சம்பூதரெனக்கூறு

தற்குவார்த்தையெழாதென்க இப்பண்டிதர்வார்த்தையினைத்தாக்ஷண்யம்பற்றி ஏற்றுக்கொள்வதா?

"தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியுங்—கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லு
மொருவா சகமென் றுணர்."

என அவ்வைப் பிராட்டியார் திருவார்த்தையினை ப்ரதான்யமாக ஏற்றுக்கொள்ள வேண்டுவதாவென் றாக்ஷேபனை வருமன்றோ? அவ்வையார் திருவாக்குப் பொதுமொழியாதலா லதனைப் பலரும் ஏற்றுக்கொள்வரென்பது நிச்சயமேயென்க.

வினா:—அற்றாயின் பல புராணங்களில் வியாசர் வாக்கியமெனக் கூறியுளதற்கு ஆக்ஷேபனை வருமன்றோ?

விடை:—வியாசமுனிவர் பூர்வவேத மரியாதையினைக்கருதிக்கொஞ்சம் வம்ஸாபிமானம்வைத்தனரேயன்றி அவ ரந்தரங்காபிப்ராயத்தினைப் பண்டிதர்க ளுணரவில்லை. அங்ஙனமுணராது பல புராணங்களிலு மிது வியாசப்ரோக்த மென்றே தமக்கு வேண்டுவனவாய விஷயங்களைப் புகன்றுள்ளார். அன்றியும் விப்பிரரில்மத்துவமதத்திற்கு ஆசாரியாராயும் வியாசா சாரியரெனப்பெயரமைந்தவராயும் இக்கலியில் ஓர் பண்டித ரிருந்தனரென விப்பிரர்களுக்குரிய பஞ்சத்திராவிடகோத்திர காண்டத்திற் கூறப்பட்டிருக்கிறது. இவ்விப்பிர

பண்டிதர்களென்னும் ஹம்ஸங்கள் வார்த்தையினை இந்துக்க ளங்கீகரிப்பார்களேயன்றி பஞ்சானனர் வார்த்தையினைக் கொஞ்சமுங் கவனியாராதலால் அன்னப்பக்ஷிகள் தாமரைக்காட்டை எப்படியழித்தனவோ அப்படிப்போல விப்ரபண்டிதர்களென்னும் அன்னங்கள் பஞ்சப்ரம்ஹ சந்ததியென்னுந்தாமரைக்காட்டை யழித்தனவென்பது நிச்சயம். தாமரைப்பூவினுக்குச் சூரியன்மித்ருவாதல் போலச் சகலமான உயிர்களுக் கெல்லாம் மித்ருவாயிராநின்ற எமது தந்தையென்னும் ஸ்கந்தர் சென்ற விஷயங்களையாலோசித்து இந்நூல் வரையச்செய்தனரென்பது சத்தியம். இதனை

“தந்தைதாய்தனது மைந்தனைவளர்க்கச்
சிந்தையிலெண்ணஞ் செய்தவாறுபோ
லறிவினுக்கறிவா யிருந்தேயென்ற
னறிவைநாடோறும் வளர்த்தனையெந்தாய்”

எனக் கஞ்சமலைச்சித்தர் நான்மணிமாலைக் கவியாலுணர்க.

விஞ:--சகலமானவர்களும் உணர்விற் சிறப்பமைந்தவரும் (18) சித்தர்களில் ஆதியானவருமாக விளங்காநின்ற ஸ்ரீமத் அகஸ்தியமஹாமுனிவர் ஸ்ரீ சுந்தரதநுக்ரஹம்பெற்றுப் பொதிகையின்கண் சதாஞான சூரியனைப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார். பூதசூரியனதுகாந்தி எங்கும் பாவியிருப்பதெப்படியோ அப்படிப்போல அகஸ்தியமுனிவரது திருவாக்கினின்றெழுந்த தென்

மொழி பன்னுளாகத் தென்னுடெங்குஞ் சிறப்பு வாய்ந்துளது. அத்தகையமொழியில் வேதரஹஸ்யத்தைத்திரட்டி ஸ்ரீ மாணிக்கவாசகர் சிவநேச மிகுந்த அன்பர்களுக்குக் காணிக்கை கொடுத்தது போ லியற்றியுள்ள திருவாசகத்தைப் பிரஜாபதிகளி லொருவராகிய ஆங்கிரச கோத்திரதீபமாக விளங்காநின்ற ஸ்ரீ போகமுனிவரது புத்திரர்களெனப்படுகிற ஆங்கிலேயர்கள் தமதுபாஷையிலமைத்து மிகுந்த அன்பை பக்தியில் வகித்து தமது உள்ளக்கமலத்தின்கண் வகித்துக்கொண்டுள்ள குஹனென்னுங் கடவுளைத்துதித்து மிகுந்த திருப்தியடைகிறார்கள். இத்தகைய மெய்யன்பர்களறிவைத் தினேதினே யபிவ்ருத்தி செய்வரேயன்றி ஏனையோருள்ளத்திருந்தும் அவர்க்குவெளிப்படாரென்பதுதோன்ற 'ஓராதாருள்ளத் தொளிக்குமொளியானே' என்றார் ஸ்ரீ மாணிக்கவாசகர். இம்மாணிக்கம்போலொளிராநின்ற கடவுளது திருநாமத்தையும் அவரை இயற்கையறிவினலறிந்துள்ள கஸ்யபாதி தேவரிஷிகள் (கஉ௩) பேர்களது திருநாமங்களையும் அவரவர்கள் தமது மைந்தர்களுக்கு வைப்பார்களன்றோ! இதுபோல விப்ரபண்டிதர்களில் தேவரிஷிகளுடைய பூர்வ நாமங்களை வஹித்துள்ளவர்கள் அனேகரிருந்தார்கள். அவர்க ளணிமாதி சித்திபெற்று அதனு லிந்திராஜாக்களிடத்திற் பல இந்திரஜால வித்தைகளைக் காட்டித் தங்கள் வம்ஸத்திற்கு வேண்டுவனவாய பல காரியங்களைப் பலப்படுத்

திக்கொண்டார்க ளென்பது நிச்சயமாதலானும் கஸ்யபாதி தேவரிஷிகளுக்குப்பிரஜைகளெல்லாம் புத்திரர்களாதலானும் தமது ஜாதியின்மீது அவர்களனுவளவும் அபிமானம் வைக்கவில்லை யென்பது திண்ணம். இக்கஸ்யபாதி சந்ததியாருக்குப் பெரும்பாலுஞ்சமபாவமிருப்பதுபோலவிப்பிரர்களில் (சூ) த்தி லொருவருக்கிருந்தாலு மிருவரும் சமத்துவமல்லது சஹோதரபாவமாக இருப்பார்களன்றோ! பிதாவானவன் விசேஷமாயநிதியைத் தேடி அதனைத் தனது புத்திரர்கள் கையிற்கொடுத்து இதனால் நீங்கள் ப்ராதாரமான சுகத்தைத் தேடிக்கொள்ளுங்களென் றெப்படித் திருவாக்களித்தானோ அப்படிப்போல பொதுக்கடவுள் அனுதியாயுள்ள வேதமெனப்படுகிற அழியாப் பொருளையுண்டுபண்ணி அதில் கர்மம்,பக்தி,யோகம், ஞானம், எனப்படுகிற நாற்பொருள்களையமைத்து இவற்றால் யாவரும் நற்கதியினையடையுங்களெனத் திருவருள்புரிந்துள்ளார். இங்ஙனம் அவரதநுக்ரஹம் பெற்றவர்களாக விளங்காநின்ற மன்வாதிகளி லொருவராகிய பிரும்ஹாவானவர் பிரஜாபதிகளுக்கும், அப்பிரஜாபதிகள் மநுவுக்கும், மநு பிரஜைகளுக்கும் நிதியை ஆதியில் விதித்துளராதலால் பஞ்சப்ரம்ஹ சந்ததியார்கள் புத்ர பௌத்ர பரம்பரையாக அத்தியயனஞ் செய்துக்கொண்டே வந்தார்கள். அத்தகைய வேதங்களை அவர்களிடத்தி னின்றும் விப்பிர சந்ததியார்கள் பாராயணம் பண்ணி யுத்க்ருஷ்

டாளாஞர்க ளென்பது நிச்சயம். இதனை

"తద్ధైతద్బ్రహ్మా ప్రజాపతయ ఉవాచ ప్రజాప
తిర్మనవే మనుః ప్రజాభ్యః ఆచార్య కులాద్వేద మధీత్య."

"தத்தைதத்ப்ரம்ஹா ப்ரஜாபதய உவாச ப்ரஜாபதிர் மனவே மநுஃப்ரஜாப்பியஃ ஆசார்யகுலாத்வேதமதீத்ய"

எனச்சாந்தோக் யோபநிஷத்திலடங்கிய அஷ்டம ப்ரபாடவாக்கியத்தா லுணர்க. இதஞல் மன்வாதி பஞ்சப்ரம்ஹ சந்ததியார்கள் ஆதியிலிருந்தமறை யோர்க ளெனவும் வியாசாதி சந்ததியார்களிடை யில் வந்த மறையோர்களெனவும் வெளிப்படை யாகப் பலருக்கும் பொருள் புலப்படுகின்றதென் பது நிச்சயம்.

இங்ஙனமிருக்க, சூரியனுதயமாய பின்னர் இருளகன்று உயிர்களெப்படிச் சந்தோஷித்தார் களோ அப்படிப்போல இங்கிலீஷ் அரசாங்கமெ ன்னுஞ் சூரியனெழுந்தவுடன் இந்துதேசத்தவர் கள் சந்தோஷித்தார்க ளாதலாலிங்குள்ள வலங் கையிடங்கை என்னு மிருளகன்றது. ஆன்திஞ லன்றே கம்மாளர் தங்களுடைய பூர்வாசாரநிலை மையினைக் கொஞ்சமனுஷ்டித்து வருகின்ருர்கள்.

இவ்வாசாரம் புறஒழுக்கம்அகஒழுக்கமென இருவகைப்பட்டுள்ளன. அவற்றுள் நீராடைம்பு தூய்தாதல்யாதோ அதுபுறஒழுக்கமும், தத்துவ விசாரத் தெளிவாய மெய்மையறிவிஞல் பொய்

மையறிவல்லது பொருளல்ல வற்றைப் பொரு ளெனக்கருதி மருளகலுதல்யாதோ அது மனோ பரிசுத்தமெனப்படுகிற அகஒழுக்கமுமாம். இவ ற்றைமேற்கூறப்பட்ட சகந்தினர் கஸ்யபர் சாங்கி யாயனர் முதலியனவாய (௱உ௫) தேவரிஷிகளி யல்பாகவே யிமைந்தவர்களாதலால் சகல சராசர வுயிர்கண்மீது செவ்வியகருணைகூர்ந்து ஜீவர்களது பூர்வகர்மத்திற்குத் தக்கவாறுதானே காரணகர்த் தர்களாகவிருந்து ஸ்ருஷ்டித்துஅவற்றைப்பரிபா லனைபூண்டொழுகும் வித்தினைப் பிரதானமாகக் கொண்டோரெனப் பலருக்கும் வெளிப்படையா கப் பொருள் தோன்ற "அந்தணரென்போ ரற வோர்மற் றெவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண் டொழுகலால்" எனத் திருவள்ளுவநாயனர் மிக்க நேயமாகத் திருவாய்மலர்ந்தருளியுள்ளார். அத் துணைச் சிறப்புவாய்ந்த ப்ராஜாபதிகள் பொது வாக ஏற்படுத்தியுள்ள மநு ஸ்மிருதி முதலிய வைகள் பழய ஏற்பாடெனவும், பஞ்சானனரென் னுங் கம்மாளர்களுக்கு விரோதமாக இக்கலியில் விப்பிரர்கள்கற்பனை பண்ணியுள்ளமித்ரபேதமுத லியனவாய பஞ்சதந்திரங்களே புதுஏற்பாடென வும் பட்டப்பகல்போலத் தோற்றுகின்றது. இவ் வாறே ஆங்கிலேயர் வேதத்திலும் இரண்டுஏற் பாட்டுக்கதைகளைக் கூறப்பட்டிருக்கின்றது. இங் ஙனமாகச் சுருதியாதிகளில் புகன்றுள்ள ப்ராஜா பதி சந்ததி ருஷிசந்ததி யெனப்படுகிற விரண்டு நிலைமையினை வேதமுணர்ந்த விப்பிரபண்டிதர்

பரியாலோசிக்கவேண்டும். அங்ஙனம் பரியாலோசியாதுவரைந்துள்ள வாக்கியங்களில் முக்கியாபிப்பிராயத்தைப் பலருங் கவனிக்கும் பொருட்டு பொதுவாகச்சுருக்கித் தெரிவித்தனம்.

சேன்சஸாபாசதர்ப்பணை

முக்கியகவனிப்பு

முற்றுப்பெற்றது.

உ

# விஸ்வகர்ம புஸ்தகசாலை.

| | | | |
|---|---|---|---|
| விஸ்வப்பிரம்ம புராண வசனம் | 0 | 8 | 0 |
| விஸ்வகர்மோபதேச வீரகண்டாமணி உரையுடன் | 0 | 10 | 0 |
| விஸ்வகுரு சதகம் உரையுடன் | 0 | 6 | 0 |
| இராமசுனர் என்னும் இராமானந்த சர்மாவின் திவ்விய சரித்திரம் | 0 | 6 | 0 |
| சேலந் தீர்ப்பு ... ... ... ... | 0 | 6 | 0 |
| விஸ்வகர்மானுஷ்டான வேதமஞ்சரி ... | 0 | 2 | 0 |
| வேலூர் தீர்ப்பு ... ... ... ... | 0 | 2 | 0 |
| பந்தர் அபிஷேகத் தீர்ப்பு . ... ... | 0 | 1 | 0 |
| குலசங்கரமாலை ... ... ... ... | 0 | 1 | 0 |
| நித்தியகருமச் சுருக்கம் ... ... ... | 0 | 1 | 0 |
| தமிழ் பெரிய அரிச்சுவடி ... ... | 0 | 0 | 6 |
| கிரந்தாக்ஷர பிரதம பாலசிக்ஷை ... ... | 0 | 0 | 6 |
| தேவி கட்கமாலை தமிழும் தெலுங்கும் சேர்ந்தது ஒரே புஸ்தகம் | 0 | 2 | 0 |
| இரதகாராதிகரணவிசாரம் (தெலுங்குபதிப்பு) | 0 | 8 | 0 |
| விஸ்வகர்மானுஷ்டான வேதமஞ்சரி (தெலுங்கு பதிப்பு) | 0 | 6 | 0 |
| சித்தூர் தீர்ப்பு ... ... ... ... | 0 | 6 | 0 |
| கிரந்தாக்ஷரத்தில் சந்தியாவந்தனம் ... | 0 | 0 | 6 |
| மாந்தை நகராதிபதி சதகம் ... ... | 0 | 6 | 0 |
| விஸ்வகர்மாந்வய பூஷணம் ... ... | 0 | 2 | 0 |
| கலைவாணி சதகம் ... ... ... | 0 | 2 | 0 |
| ஸ்ரீ விஸ்வேஸ்வரர் படம் ... ... | 0 | 4 | 0 |
| ஸ்ரீ விஸ்வேஸ்வரர் யந்திரம் ... ... | 0 | 4 | 0 |

**கோ. கன்னியப்ப ஆச்சாரி,**
5/10, வேதகிரிமேஸ்திரி வீதி,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.